பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 02 புதன்கிழமை 16.03.2022 கதிர் 365

மார்ச் 22 - 25 வரை சபை அமர்வுகள்!

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நாடாளுமன்ற அமர்வுகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2

வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் சைக்கிளில் பேரணி

விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

(எஸ்.நிதர்ஷன்)

அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் இன்று சைக்கிளில் பேரணியாக சபை அமர்வுக்குச் சென்றனர்.

அவர்கள் மல்லாகத்திலிருந்து வலி. வடக்கு பிரதேச சபை வரை சைக்கிளில் பேரணியாகச் சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்

தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் வலி. வடக்கு பிரதேச சபையின் சகல உறுப்பினர்களும் இந்தச் சைக்கிள் பேரணியில் பங்கேற்றனர்.

இலங்கையில் இனப்படுகொலை ஒருபோதும் இடம்பெறவேயில்லை

ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சு நல்ல ஆரம்பம் என்கின்றது அரசு

இலங்கையில் இனப்படுகொலை இடம் பெற்றுள்ளது எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டு அடிப்படை அற்றது. அவ்வாறு எதுவுமே இங்கு நடக்கவில்லை.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

2

ஜனாதிபதி இன்றிரவு விசேட உரை

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

இதன்படி, இன்றிரவு 8.30 மணிக்கு ஜனாதிபதி நாட்டு மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களை ராஜபக்ஷ அரசு தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது!

ஜே.வி.பி. எச்சரிக்கை

நாட்டு மக்களை ராஜபக்ஷ அரசால் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது.

- இவ்வாறு ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகப் பொருளாதாரத்தின் தாக்கங்களால் இலங்கையில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது என்ற அரசின் வாதம் பொய்யானது.

தற்போதைய நிலைமைகளில் அநேகமான நாடுகளின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது.

2

60 ஔடதங்களுக்கான விலைகளில் மாற்றம்

60 ஔடதங்களுக்கான விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சுகாதார அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று மாலை சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

ஔடத இறக்குமதியாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய இந்த விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2

காரில் பயணித்த மூவர் கஞ்சாவுடன் சிக்கினர்!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 8 கிலோ கேரள கஞ்சாவைக் கடத்திச் சென்ற மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார்

2

பஸிலை விரட்டும் வரை எமது போராட்டம் ஓயாது

கம்மன்பில சூளுரை

அசிங்கமான அமெரிக்கரான பஸில் ராஜபக்ஷவை அமெரிக்காவுக்கு விரட்டும் வரை எமது போராட்டம் ஓயாது. எம்மைச் சிறையில் அடைத்தால்கூட இதற்கான நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது.

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நான் வலுசக்தி அமைச்சராகப் பதவி வகித்தபோது, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாரிந்துரைக்கமைய டீசல்

2

மோடி - பஸில் சந்திப்பு

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அந்நாட்டுப் பிரதமர் நரேந்திரமோடியை இன்று நேரில் சந்தித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

இலங்கையில் இனப்படுகொலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதிகளிடம் சிக்கிய மக்களை மீட்கவே நீதியான முறையில் போர் முன்னெடுக்கப்பட்டது. மாறாக இனப்படுகொலை இடம்பெற்றது என்றெல்லாம் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும். வெளிநாடுகளில் சம்பளம் வாங்கும் தரப்பொன்றே அவ்வாறான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழ் டயஸ்போராக்கள்தான் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றனர் எனக் கூறப்படுவது தவறு. தமிழ் டயஸ்போராக்களில் புலிகளின் கருத்தியலுடன் இருக்கும் சிறுதரப்பொன்றே இவ்வாறான செயற்படுகளில் ஈடுபடுகின்றது. அவர்கள் வீதியில் போராடுவதால் பெரிதாக எதுவும் நடக்கப்போவதில்லை. இந்நிலைமையும் தற்போது மாறி வருகின்றது.

ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார். அது சிறந்த ஆரம்பமாக அமையும் என நம்புகின்றோம் - என்றார்.

காரில் பயணித்த மூவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

யாழிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த சொகுசு காரை இன்று காலை வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் வழிமறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அதில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் காரும் கைப்பற்றப்பட்டது.

அதேவேளை, காரில் பயணித்த குருநாகல் மற்றும் கண்டி பகுதிகளைச் சேர்ந்த 44 ,41, 39 வயதுகளையுடைய பெண் ஒருவர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி சுமார் 12 இலட்சம் ரூபாவாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

பஸிலை விரட்டும் வரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலையை 7 ரூபாவால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன். இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டு, என்னைப் பதவி விலகுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வலியுறுத்தினார். ஆனால், இன்று டீசல் விலை 55 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது சாகர காரியவசம் என்ன செய்யப் போகின்றார்?

டீசலுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என நான் முன்கூட்டியே அறிவித்தால்தான் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டது என அமைச்சர்கள் கூறுகின்றனர். அப்படியானால் மருந்து, கோதுமை மா, சமையல்எரிவாயு ஆகியவற்றுக்கு எப்படித் தட்டுப்பாடு ஏற்பட்டது? டொலர் பிரச்சினையே இதற்கு மூலகாரணம்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அந்நிய செலாவணி கையிருப்பை முறையாக முகாமை செய்யாததாலேயே டொலர் பிரச்சினை ஏற்பட்டது. எனவே, தனது இயலாமையை மூடிமறைக்க எம் மீது குற்றஞ்சாட்ட வேண்டாம் என பஸில் ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேவேளை, எம்மை நீக்கிவிட்டு நாம் கூறிய விடயங்களைத் தற்போது அவசர அவசரமாக நிறைவேற்றி வருகின்றனர். ஒரு பணடோல் மாத்திரையால் குணப்படுத்தக்கூடிய நோயை, நிதி அமைச்சர் மரணம் வரை அழைத்துச் சென்றுள்ளார். இப்போதுதான் பணடோல் கொடுக்க முற்படுகின்றார்.

நாம் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறவில்லை. அரசுக்குள் கலந்துரையாடியபயன் இல்லை என்பதால்தான் மக்கள் மத்திக்கு வந்தோம்.

எமக்குஎதிராகவழக்குத்தொடுக்கலாம். சிறையில் அடைக்கலாம். ஆனாலும், நாம் பின்வாங்கமாட்டோம். அசிங்கமான அமெரிக்கரான பஸிலை அமெரிக்காவுக்கு விரட்டும் வரை எமது போராட்டம் ஓயாது. - என்றார்.

நாட்டு மக்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உக்ரைன் - ரஷ்ய போர் காரணமாக நாட்டில்பொருளாதார நெருக்கடிஏற்பட்டது என அரசு காரணம் கூறக்கூடிய சாத்தியம் உண்டு.

கொரோனாப் பெருந்தொற்று, வறட்சி போன்ற காரணிகளால் நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டது எனக் கூறி அரசு மக்களைப் பிழையாக வழிநடத்த முயற்சிக்கின்றது.

ஜனாதிபதியோ, நிதி அமைச்சரோ மக்களைத் தொடர்ந்தும் பிழையாக வழி நடத்த முடியாது.

தற்போதைய அரசைவீட்டுக்கு அனுப்பி வைக்க மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் - என்றார்.

60 ஔடதங்களுக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டொலர் பற்றாக்குறை காரணமாக இறக்குமதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்காகவும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மார்ச் 22 - 25 வரை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதாரச் சீர்கேடு குறித்தும் இன்று நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்

G.G.E. O/L - English Literature

Grade 10 & 11 தனி வகுப்புகள்

Language தரமும்

திருத்தப்படும்.

K.Ganesh B.A . 077 7668725

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

சபரிமலை

ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்

Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

Tel:- 021 228 3701,076 307 8091

விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

076 307 8091, 021 228 3701, 077 986 2470

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

சஜித்தின் பயனற்ற கோரிக்கைகள்

தலையடிக்கு மருந்து தலையணையை மாற்றுவதா? அப்படித்தான் நினைக்கின்றார் போலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸா.

அரசுக்கும் ஆட்சி தலைவருக்கும் எதிராக நேற்று மிகப்பெரும் மக்கள் கூட்டத்தையே கூட்டி அங்கு உப்புச் சப்பில்லாத அறிவிப்பை விடுத்திருக்கின்றார் அவர்.

நாட்டின் எரியும் பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு வழி சொல்லக் கூடிய மார்க்கம் ஒன்றை மக்கள் முன் அவர் அறிவிப்பார் என்று எதிர்பார்த்தால், பல்லாயிரக் கணக்கில் மக்களைத் திரட்டிய அவர், அங்கு காத்திர மான அறிவிப்பை – எதிர்காலத்தில் மக்கள் எழுச்சிக்கான முன்னோட்டங்களை – வெளியிடுவார் என எதிர்பார்த்தால் அந்த எதிர்பார்ப்புத் தோற்றுப் போய்விட்டது.

அங்கு அவர் வெளியிட்ட அறிவிப்பு அல்லது கோரிக்கைகளில் ஒன்று – காரிய சாத்தியமற்றது. மற் றது – தான் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்ற அவரது சுயநல நோக்கு மட்டும் கொண்டமைந்தது.

இதுதான் நிலைமை. நேற்றைய தனது அறிவிப்பில் இந்த ஜனாதிபதி பதவி விலக வேண்டும் அல்லது ஜனாதி பதித் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்று கூறினார் சஜித். இரண்டுமே அவர் எதிர்பார்க்கும் – தன்மை ஜனாதி பதியாகும் – திட்டத்திற்கு உதவப் போவதில்லை என்ற அடிப்படை விளக்கம் கூட புரியாமல் அவர் அறிவிப்பு வெளியிட்டு இருக்கின்றமைதான் இதில் விநோத மானது.

முதலாவது – தோற்றுப் போன இந்த ஜனாதிபதி தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்பது. சரி, அவர் கோரிக்கைப்படி இந்த ஜனாதிபதி ராஜினாமா செய்தால் என்ன நடக்கும்? உடனடியாக பிரதமர் ஜனாதி பதியாகப் பதவியேற்பார். அடுத்த ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றம் கூடி எஞ்சிய பதவிக்காலத்துக்கான ஜனாதிபதியைத் தெரிவு செய்யும். இப்போது நாடாளு மன்றத்தில்போதியபெரும்பான்மைவலிமையுடன்இருக்கும் ராஜபக்ஷக்களின் மொட்டுக்கட்சி ஏதோ ஒரு ராஜபக்ஷவைத்தான்அடுத்தஜனாதிபதியாகதெரிவுசெய்யும்.

அப்படி நடந்தால் இப்போதைய பிரச்சினையில் தலையடிக்கு தலையணை மாற்றிய கதையாகவே முடியும். ஏதும் அர்த்தபூர்வ பயன் கிடையாது.

சரி சஜித் பிரேமதாஸாவின் அடுத்த கோரிக்கை வருவோம். ஜனாதிபதி தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்பது அவரது வேண்டுகோள். இலங்கை அரசமைப்புப் படி அது அடுத்த ஒன்றரை வருடங்களுக்கு சாத்தியமே இல்லை. ஒருஜனாதிபதிதனது5ஆண்டுபதவிக்காலத்தில் நான்கு ஆண்டுகள் முழுந்த பின்னர் தான் அடுத்த ஜனாதி பதித் தேர்தலுக்கான அறிவிப்பை முன்கூட்டியே விடுக்க முடியும். 2023 நவம்பருக்கு பின்னர்தான் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை அறிவிக்க முடியும், அரசமைப்பை மாற் றாமல் நாடாளுமன்றம் கூட ஜனாதிபதி தேர்தலை முக்கூட்டியே நடத்த முடியாது. நீதிமன்றத்தினாலும் அதைச் செய்ய முடியாது.

சஜித் பிரேமதாஸாவின் எதிர்பார்ப்புப் படி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்தும் ஓர் அரசமைப்பு திருத் தத்தை உடனடியாக கொண்டு வருவதும் எவ்வளவு தூரம் காரிய சாத்தியமானது என்பது கேள்விக்குறியே. ஆக, பெரும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்துகின்றேன் என்று விட்டு, சட்டரீதியான ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைப்பதில் என்ன பயன்?

மக்கள் வரிசையில் நிற்கக் காரணம் அரசின் தவறான முடிவுகளே ஆகும்!

முன்னாள் அமைச்சர் கம்மன்பில சாடல்

மக்கள் தற்போது அனைத்திற்கும் வரிசையில் நின்று அவதிப்படுவது தன்னியல் பான நெருக்கடியால் அல்ல, தவறான முடிவினால் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் தனது டுவிட்டர் பதி வில் இதனைத் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு இறக்குமதிக்காக இலங்கை 2,060 கோடி டொலர்களை செலவிட்ட போதிலும் எரிபொருள், எரிவாயு, நிலக்கரி மற்றும் மருந்துக்காக 460 கோடி டொலர்களை மட்டுமே செலவிடப்பட்டது.

தாம் மற்றும் ஏனைய தரப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்கம் அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகளை விதித்திருந்தால், மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பௌர்ணமி தினமான நாளை சுழிபுரம் பறாளாயில் பிரித் ஓதல்!

தடுத்து நிறுத்த மக்கள் முனைப்பு

சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலய வளாகத்தில் உள்ள அரச மரத்தடியில் பௌத்த பிக்குகள் பூஜை வழிபாடு மற்றும் பிரித் ஓதுவதற்கு முனைப்புக் காட்டி வருகின்றனர். இதைத்தடுத்துநிறுத்துவதற்கு அரசியல்வாதிகளும் பிரதேச மக்களும் முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

ஈழத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் பறாளாய் விநாயகர் ஆலயமும் ஒன்று. இந்த ஆலயத்துக்கு அருகே முருகன் ஆலயமும்உண்டு.இந்தஆலயவளாகத்தில் உயரமாக வளர்ந்த அரச மரம் காணப்ப டுகின்றது. அண்மைக்காலமாக வழிபாடு என்ற போர்வையில் படையினரின் உதவி யுடன் பௌத்த பிக்குகள் அடிக்கடி இந்த ஆலயத்துக்கு வந்து சென்றனர். இதை யடுத்துநாளை(வியாழக்கிழமை)பௌர்ணமி தினத்தன்று இங்குள்ள அரச மரத்தடியில் படையினரின் உதவியுடன் பிக்குகள் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள முனைப்புக் காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கும் பௌத்த பிக்குகள் தெரியப்படுத்தி உள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

'யாவரும் கேளிர்' நூல் வெளியீடு!

வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் தின கரன் வாரமஞ்சரியில் தொடராக எழுதிய 'யாவரும் கேளிர்' என்ற தொடரின் தேர்ந் தெடுக்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட 'யாவரும் கேளிர்' என்ற நூல் வெளியீட்டு விழாவும் தி.ஞானசேகரனின் 80 ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்திய இலக்கியப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறும்.

லேக்ஹவுஸ் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமை தாங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஜனாதி பதி சட்டத்தரணி டபிள்யு. தயாரத்ன கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கொழும்பு சொப்ற் வளாக துணைவேந்தர் பேராசிரியர் சோ. சந்திரசேகரமும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டதரணி நடராஜர் காண் டீபனும் கலந்து கொள்வார்கள்.

இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் நிகழ்விற்கு முன்னிலை வகிப்பார். தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வி ரோகிணி பாலச்சந்திரன் இசைக்க, வரவேற்புரையை கலாபூஷணம் கே. பொன்னுத்துரை நிகழ்த்து வார். வாழ்த்துரையை கொழும்புத் தமிழ்ச் சங்கப்பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி வழங்க, நூல் அறிமுகத்தை திரு மதி பவானி முகுந்தன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து ரூபவ் ஞானம் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகர னின் 80 ஆவது அகவையை முன்னிட்டு நடத்திய மாபெரும் இலக்கியப் போட்டியின் பரிசளிப்பும், ஞானம் சஞ்சிகை நடத்திய அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2021- பரிசளிப்பும் நடைபெறும். நிறைவாக ஞானம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரனினது ஏற்புரையும் நன்றியு ரையும் இடம்பெறும்.

நேற்று மட்டும் 8,304 கோடி ரூபாவை அச்சிட்டுள்ளது இலங்கை மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி நேற்று (செவ் வாய்க்கிழமை) 8,304 கோடி ரூபாவை அச்சிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை 22,27 கோடி ரூபாவை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் மொத்தம் 22,900 கோடி ரூபாவை இலங்கை மத்திய வங்கி அச் சிட்டுள்ளது.

சமையல் எரிவாயுவின் விநியோகம் நிறுத்தம்!

சமையல் எரிவாயு விநியோகத்தை இலங்கையின் பிரதான எரிவாயு விநியோக நிறுவனங்களான லாப் மற்றும் லிட்ரோ ஆகியன நிறுத்தியுள்ளன.

தமக்கான இருப்புக்கள் கிடைக்காதமை காரணமாக விநியோகத்தை நிறுத்தியுள் ளதாக அந்த இரு நிறுவனங்களும் அறி வித்துள்ளன.

தற்போது இலங்கை சந்தையில் சமையல் எரிவாயு பற்றாக்குறையை சந்தித்து வரு வதாக லிட்ரோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை நாடளாவிய ரீதியில் மேற் படி நிலையங்களுக்கு முன்பாக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமை குறிப் பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

புதன்கிழமை
16.03.2022

போலந்து எல்லையில் தாக்குதல் 35 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

போலந்து எல்லைக்கு அருகில் உள்ள உக்ரைன் இராணுவ தளத்தின் மீது நடத்தப்பட்ட ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல், நேட்டோவை அச்சுறுத்தும் முயற்சி என்று போலந்தின் துணை வெளியுறவு அமைச்சர் மார்சின் பிரசிடாக்ஸ் தெரிவித்துள்ளார். மேற்கத்திய இராணுவக் கூட்டணியின் உறுப்பினரான போலந்தின் எல்லையில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள யாவோரிவ் பயிற்சித் தளத்தில் நடந்த தாக்குதலில் குறைந்தது 35பேர் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில், ரஷ்யாவின் இந்த நடவடிக்கை மிகவும் ஆத்திரமூட்டும் செயல் என்று பிரசிடாக்ஸ் கூறியுள்ளார். மேலும், 'இந்த இராணுவத் தளம் போலந்துஎல்லைக்குமிகஅருகாமையில் அமைந்திருந்தது அவர்களுக்குநிச்சயமாகத் தெரியும்' என்று கூறினார்.

அமெரிக்க பத்திரிகையாளர் உக்ரைனில் உயிரிழப்பு



அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ப்ரெண்ட் ரெனாட், உக்ரைன் தலைநகர் கீயவுக்கு வெளியே இர்பின் என்ற நகரில் சுட்டுக் கொல்லப் பட்டார் என்று பொலிஸார் தெரி விக்கின்றனர். அவர் ரஷ்ய படையினரால் தாக்கு வைக் கப்பட்டார் என்று கீயவின் தலைமை பொலிஸ் அதிகாரி ஆண்ட் ரிவ் நெபிடோவ் தெரி வித்துள் ளார். மேலும் இரு பத்தி ரிகையாளர்கள் காயமடைந்து அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ள னர். இதன்மூலம் உக்ரைனில் செய்தி சேகரிக்கும் முதல் வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டுள் ளார். ப்ரெண்ட் ரெனாட்டிற்கு நியூ யோர்க் டைம்ஸ் பத்திரிகை யால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் படம் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த 2015 ஆம் ஆண்டுதான் ப்ரெண்ட் ரெனாட் தங்களுக்காக கடைசியாக பணிபுரிந்தார் என்றும், உக்ரைனில் தங்க ளுக்காகஅவர்பணிபுரியவில்லை என்றும் நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. மேலும் அவர் பணி செய்து வந்த காலத்தில் அந்த அடையாள அட்டை வழங்கியதாகவும் நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. எனவே உக்ரைனில் ப்ரெண்ட் எந்த பத்திரிகைக்கு பணி செய்து வந்தார் என்பது இது வரை தெரியவில்லை.

1,000 உக்ரைனிய அகதிகளை வரவேற்க தயாராகும் வேல்ஸ்

குறைந்தது 1,000 உக்ரைனிய அகதிகளை கவனிக்க வேல்ஸ் திட்டமிட்டுள்ளதாக, வேல்ஸ் முதலமைச்சர் மார்க் டிரேக்போர்ட் தெரிவித் துள்ளார்.

எனினும், வேல்ஸ் பொறுப்பேற்கும் அகதி களின் எண்ணிக்கையை மொத்தமாக கணக்கிட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். வேல்ஸ் ஒரு புகலிட தேசமாக இருக்க வேண்டும் என்று தான் விரும்புகிறேன் எனவும், முதல் கட்ட தீர்மானத்தை எடுப்பதற்கான திட் டங்கள் இப்போது இருக்கின்றன எனவும் அவர் கூறி னார்.

50 ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான சேதத்தை ரஷ்யா விளைவித்துள்ளது

ரஷ்யாவின் படையெடுப்பை தொடர்ந்து தாம் 50,000 கோடி டொலருக்கும் அதிகமான சேதத்தை சந்தித் துள்ளதாக உக்ரைன் பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும் போருக்குப் பின்னர் உக் ரைனைமீட்டெடுப்பதற்குரஷ்யா பணம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். உக்ரைனுக்கு நட்பு நாடு களிடம் இருந்து நிதி கிடைக்கும் என்றும் வெளிநாட்டில் ரஷ் யாவின் சொத்துக்களை கைப் பற்றுவோம் என்றும் அவர் கூறியுள்ளார். கியூவ் நகருக்கு விஜயம் செய்த செக் குடியரசு, போலந்து மற்றும் ஸ்லோ வேனியா ஆகிய மூன்று அண்டைநாடுகளின்தலைவர் களுடனான சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள் ளார். இதேவேளை நான்காவது சுற்று சமாதானப் பேச்சுகள் ஓரளவு முன்னேறியுள்ளன என்றும் மிகவும் யதார்த்தமாக ஒலிக்க தொடங்கியுள்ளன என்றும் உக்ரைனின் ஜனாதி பதி குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் கொவிட் பரவல்; ஷென்ஜென் நகரில் ஊரடங்கு

சீனாவில் கொவிட் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவ தால், தொழில்நுட்ப நகரமான ஷென்ஜென் நகரில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

கொவிட் உருவான சீனா வில், சமீபத்தில் அந்த வைரஸ் பரவல் வேகமெடுத்துள்ளது. இதனால், அந்நகரில் ஊரடங்கு கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு அமுல்படுத்தி வருகிறது.

அந்நாட்டின் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்க ளான ஹவாய் மற்றும் டான் சென்ட் ஆகியவற்றின் மைய மாக விளங்கும் ஷென்ஜென் நகரில் 66 பேருக்கு கொவிட் உறுதியானது. இதனால், 1.7 கோடி பேர் வசிக்கும் அந்நகரில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்ப டுவதாக அம்மாகாண அரசு அறிவித்துள்ளது. ஹாங்காங் அருகில்உள்ள இந்நகரில், ஒமிக் ரோன் பரவல் காரணமாக ஏற் கனவே அத்தியாவசியம் இல் லாத நிகழ்ச்சிகள் மற்றும் கோட் டல்களில் உணவருந்துவதற்கு தடை விதிக் கப்பட்ட நிலையில், தற்போது ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டு உள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

ஹிஜாப் தடையைத் தொடரும் உயர்நீதிமன்ற உத்தரவு எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மாணவி மேன்முறையீடு

கர்நாடக மாநிலம் உடுப்பி குந்தாப்புராவில் உள்ள அரசு பி.யூ.கல்லூரியில் மாணவ, மாணவியர் சீருடை அணிந்து வரவேண்டும் என அந்தக் கல்லூரி நிர்வாகம் அறிவுறுத்தியிருந்தது. அதன் பின்னர், அந்தக் கல்லூரியில் பயின்று வந்த இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மாணவிகள் சிலர் சீருடை மீது ஹிஜாப் அணிந்து வந்ததற்கு கல்லூரி நிர்வாகம் தடை விதித்தது.

அந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மாணவிகள் பர்தா அணிந்து போராட்டம் நடத்தியிருந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்த கல்லூரியில் படிக்கும் இந்து மதத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் காவித்துண்டு அணிந்து கல்லூரிக்கு வந்தனர். இந்த முரண்பாட்டு விவகாரம் மாநிலம் முழுவதும் பரவியது.

இதையடுத்து பாடசாலைகள், கல்லூரிகளுக்கு அனைவரும் சீருடை அணிந்து வர வேண்டும் என மாநில அரசு உத்தரவிட்டது. கர்நாடக அரசு விதித்த ஆடைக் கட்டுப்பாடு மற்றும் உடுப்பியில் உள்ள அரசுக் கல்லூரியில் மாணவிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு தடை விதிக்கக் கோரி கர்நாடக உயர்நீதிமன்றில் பொதுநல மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மாணவிகளான ரேஷ்மா பாரூக், காஜிரா மற்றும் அவரது தாய் உள்ளிட்டோர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுக்கள் மீதான விசாரணை கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதி கிருஷ்ண தீக்சித் முன்னிலையில் நடைபெற்றது. அதன்போது, ஹிஜாப் அணிவது தொடர்பான பிரச்சினையை கர்நாடக உயர்நீதிமன்றின் விரிவான அமர்வு விசாரிக்கவேண்டும் என தனி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு கர்நாடக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி, நீதிபதிகள் கிருஷ்ண தீட்சித், காஸி ஜெய்புனிா முகைதின் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. மனுவை விசாரித்த நீதிபதிகள், தீர்ப்பு வரும்வரை மதத்தை அடையாளப்படுத்தும் உடைகளை மாணவர்கள் அணிந்து செல்லத் தடை விதித்து உத்தரவிட்டனர்.

விசாரணை முடிவில் ஹிஜாப் விவகாரம் குறித்த பல்வேறு மனுக்களை கர்நாடக உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. ஹிஜாப் இஸ்லாமிய சமுதாயத்தின் ஓர் அங்கமாக இல்லை. அரசின் சீருடைச் சட்டத்திற்கு அனைவரும் உட்பட்டவர்களே. எனவே, ஹிஜாப் அணிவதற்கான தடை உத்தரவு தொடரும் என கர்நாடக உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு வரவேற்பு அளித்துள்ள மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி , நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்கிறேன். மாநிலம், நாடு முன்னேற வேண்டும். உயர்நீதிமன்ற உத்தரவை ஏற்று மாணவர்கள் அனைவரும் அமைதி காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். படிப்பதுதான் மாணவர்களின் அடிப்படைக் கடமை. எனவே, குழப் பங்களைவிட்டுவிட்டுஅவர்கள்வெளியேவரவேண்டும். படித்து ஒற்றுமையாக இருங்கள், என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், ஹிஜாப் தடைக்கு எதிராக முதலில் மனுத் தாக்கல் செய்த ஜவரல்லாத வேறொரு மாணவி நிபா நாஸ் என்பவர் உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

உக்ரைனிலிருந்து 23 ஆயிரம் இந்தியர்களை மீட்டுள்ளோம் என பிரதமர் மோடி பெருமிதம்

உக்ரைனிலிருந்து இந்தியர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள தூதரக அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகளின் நிர்வாகிகளுடன் இந்தியப் பிரதமர் மோடி காணொலி தொடர்பாடல் மூலம் கலந்துரையாடியுள்ளார்.

உக்ரைனில் இருந்து சுமார் 23,000 இந்தியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலைகளில் இந்த மீட்பு நடவடிக்கையை நடத்துவது மிகவும் சவாலானது. உக்ரைனில் இருந்து வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களையும் நாம் பத்திரமாக வெளியேற்றியுள்ளோம். உக்ரைன் மற்றும் அதன் அண்டை நாடுகளுக்கு 90 தொன் நிவாரணப் பொருள்கள் உதவியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன, என்றும் வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பிற்கு இந்திய அரசு அதிக முன்னுரிமைஅளித்துவருகிறது எனவும் இந்த உரையாடலின் போது பிரதமர் தெரிவித்துள்ளார் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

எந்தவொரு சர்வதேச நெருக்கடியின்போதும் தனது குடிமக்களுக்கு உதவ இந்தியா எப்போதும் அக்கறையுடன் செயல்பட்டுள்ளதை பிரதமர் மோடி நினைவு கூர்ந்தார் எனவும், ஒப்ரேஷன் கங்கா நடவடிக்கையில் குழுவாக ஈடுபட்டுள்ள அனைவரும் வெளிப்படுத்திய தேசபக்தி, சமூக சேவை உணர்வு ஆகியவற்றை அவர் பாராட்டினார் எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

திரையரங்குகளில் படம் பார்க்க அசாம் மாநில அரசு ஊழியர்களுக்கு அரை நாள் சிறப்பு விடுமுறை

காஷ்மீரில் இருந்து இந்து மத குருமார்கள் வெளியேற்றப்பட்டமையை அடிப்படையாக வைத்து விவேக் அக்னிகோத்ரி இயக்கத்தில் த காஷ்மீர் பைல்ஸ் என்ற இந்தித் திரைப்படம் வெளியாகியுள்ளது. இந்தப் படத்துக்கு ஹரியானா, குஜராத், கர்நாடகா மாநிலங்களில் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அந்தத் திரைப்படத்தைத் திரையரங்குகளில் சென்று பார்ப்பதற்காக அசாம் மாநில அரசு ஊழியர்களுக்கு அரை நாள் சிறப்பு விடுமுறை அளிக்கப்படுவதாக அந்தமாநிலத்தின் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

இந்தத் திரைப்படத்தைப் பார்ப்பது தொடர்பாக அரசு ஊழியர்கள் முன்கூட்டியே தங்களது உயர் அதிகாரிகளிடம்தெரிவிக்க வேண்டும் என்றும், மறுநாள் நுழைவுச்சீட்டுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அசாமில்இந்து, முஸ்லிம்கள் என பாகுபாடு இல்லாமல் மக்கள் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டுள்ளனர்எனவும், காஷ்மீருடன் ஒப்பிடும்போது அசாம் சிறப்பாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஹிஜாப் வழக்கில் கர்நாடகா உயர்நீதிமன்றத் தீர்ப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், இந்தத் தீர்ப்பு தங்களுக்கு எதிரானது என முஸ்லிம்கள் நினைக்கக் கூடாது என்றும், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் ஒரே மாதிரியான சீருடை இருக்கவேண்டும் என்றும் தமது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீட் விலக்கு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்ப ஆளுநர் உறுதியளித்தார் என்கிறார் ஸ்டாலின்

இந்திய மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளதனால் தமிழகக் கிராமப்புற மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதெனவும், நீட் தேர்வு அச்சம் காரணமாக மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை கடந்த சில வருடங்களாக ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டுவருகின்றன.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீட் தேர்விற்கு எதிராக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது. நீட் தேர்வின் காரணமாக ஏழை, ஏளிய மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும்நிலையில்அரசுப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது.

கடந்த ஆண்டு மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பதவிக்கு வந்ததும் சட்டசபையில் மீண்டும் நீட் தேர்விற்கு எதிராக மசோதா நிறைவேற்றி தமிழக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த மசோதாவின் மீது விளக்கம் கோரி, நீண்டநாள்களுக்கு பிறகு தமிழக அரசிற்கே ஆளுநர் அதைத் திருப்பி அனுப்பிவைத்தார். இதனையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் எட்டாம் திகதி கூட்டப்பட்ட சிறப்பு சட்டசபை கூட்டத்தில் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றி தமிழக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் நிறைவேறி ஒரு மாத காலத்திற்கும் மேலானபோதும் இதுவரை அந்த மசோதா மீது ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும்நிலையில், தமிழகமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அளுநர் ஆர்.என். ரவியை நேற்றுச் சந்தித்து நீட் தேர்வு மசோதா மீது விரைவாக நடவடிக்கை எடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க வலியுறுத்தினார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச்சந்திப்புக்குப் பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டுக்கு நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரும் மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கிறேன் என ஆளுநர் உறுதி அளித்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

பாணமை – உகந்தை வீதி கொங்கிறீட் வீதியாகிறது!

25 கோடி ரூபா செலவில்

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்திற்குச் செல்லும் 19 கிலோ மீற்றர் தூர பாணமை – உகந்தை பிரதான காட்டுப்பாதை 25 கோடி ரூபா செலவில் கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்படவிருக்கிறது.

வீதி புனரமைப்பு ஆரம்பிப்பு அங்குரார்ப்பண விழா நேற்றுமுன்தினம் பாணமை மாணிக்கப் பிள்ளையார் ஆலய பிரதான வீதியில் நடை பெற்றது. அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டுவைத்து பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதற்கான நிதியை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி. வீரசிங்க ஒதுக்கியிருந்தார். 19.5 கிலோ மீற்றர் நீளமான வீதி எதிர்வரும் 3 மாத காலத்தில் 24.9 கோடி ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கப்படவிருக்கிறது.

பொத்துவில் பிரதேச சபையின் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபன் மற்றும் உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இந் நீண்டகால கோரிக்கை நிவர்த்தி செய்யப்பட்டுள் ளது.

அங்குரார்ப்பண நிகழ்வில் பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர்களான த.சுபோதரன், எஸ்.துரைரெட்ணம், வி.சசிதன் உள்ளிட்ட உறுப் பினர்கள் லாகுகலை பிரதேசசபை உறுப்பி னர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதி காரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இவ்வீதியால் தினமும் பல்லினத்தவரும் ஆலயத்திற்கும், விகாரைக்கும், குமண பறவைகள் சரணாலயத்திற்கும் பலத்த சிரமத் தின் மத்தியில் பயணிப்பது வழக்கம். இதை விட கதிர்காமபருவகாலத்தில்ஆயிரக்கணக்கானோர் வாகனங்கள் மூலமும் பாதயாத்திரை மேற் கொண்டும் பயணிப்பதும் வழமை.

கடந்த காலங்களில் பருவவெள்ளம் காரண மாக இப்பாதை அடிக்கடி சேதமடைவதும் மென் ரக வாகனங்கள் பயணிக்க முடியாமலிருப்பதும் அல்லாடுவதும் தெரிந்தவையே.

இவ்வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றியமைக் கப்பட வேண்டுமென பலரும் முயற்சித்த போதி லும் அது கைகூடவில்லை. தற்போது உப தவிசாளர்பார்த்தீபனின்முயற்சிகைகூடியுள்ளது.

கல்முனை மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்

முதல் தடவையாக தமிழர் பதவியேற்பு

கல்முனை மாநகர சபை யின் புதிய ஆணையாளராக, கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எந்திரி என்.சிவலிங்கம் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரி யான இவர், இன்று பதவி யேற்கவிருந்தார்.

முன்னாள் ஆணையா ளர், ஊழல் குற்றச்சாட்டுக ளின் காரணமாக விசார ணைக்கு உட்படுத்தப்பட்டி ருப்பதால் அவ்விடத்தை நிரப்புவதற்காக, காரை தீவைச் சேர்ந்த எந்திரி என்.சிவலிங்கம் நியமிக் கப்பட்டுள்ளார். கல்முனை மாந கர சபை வரலாற்றில் ஆணை யாளராகப் பதவியேற்கும் முதல் தமிழ் அதிகாரி என்.சிவலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

வெட்டுக்காயங்களுடன் விவசாயி வயலில் இருந்து சடலமாக மீட்பு

மட்டக்களப்பு – கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரக் குளம் வயல்பகுதில் கொட்டகை ஒன்றில் வேளாண்மையை காவல் காத்து வந்த விவசாயி ஒருவர் நேற்று முன்தினம் வெட்டுக்காயங்களுடன் சட லமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் கரடியனாறு பொலிஸார் தெரி வித்தனர். ஈரளக்குளம் பிர தேசத்தைச் சேர்ந்த விவசாயி யான 54 வயதுடைய பரசுராமன் ஆறுமுகம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த வயல் பகுதியில் உள்ள வேளாண்மை செய் கையை காட்டுமிருகங்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக சம்பவதினமான ஞாயிற்றுக் கிழமை இரவு வீட்டில் இருந்து வயல்பகுதியில் அமைந்துள்ள கொட்டகைக்கு சென்ற நிலை யில், வீடு திரும்பாத அவரை தேடியபோது அடுத்த நாள் கொட்டகையில் வெட்டுக்காயங் களுடன் உயிரிழந்த நிலையில் அவர் சடலமாக காணப்பட்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடவியல் பிரிவு அழைக்கப்பட்டனர்.

நீதிமன்ற அனுமதியுடன் சடலத்தை மீட்டு பிரேத பரிசோத னைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

கல்முனையில்தள்ளுவண்டிகளில் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள எரி பொருள் தட்டுப்பாடு காரணமாக, கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையை தள்ளுவண்டிகளில்முன்னெடுப் பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இன்று தொடக்கம் இம் முறைமை நடைமுறைப்படுத் தப்படவுள்ளதால், சமையலறைக் கழிவுகளில் துர்நாற்றம் வீசக் கூடிய குப்பைகளை மாத்திரம் இத்தள்ளு வண்டிகளில் ஒப்ப டைத்து, முழுமையாக ஒத்து ழைப்பு வழங்குமாறு, பொதுமக் களிடம் கல்முனை மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயமாக மாநகர மேயரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

நாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்த போதிலும் கல் முனை மாநகர சபையானது இருபதுக்கு மேற் பட்ட திண்மக்கழிவகற்றல் வாகனங்கள் மூலம் கழிவகற்றல் சேவையை முன்னெடுத்து வந் துள்ளது.

எனினும், கடந்த சில நாள்களாக மாநகர சபையின் இவ்வாகனங்களுக்குத் தேவை யானளவு டீசலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மாநகரமுதல்வர்சிரேஷ்டசட்டத்தரணி ஏ.எம்.றகீபின் அறிவுறுத்தலின் பேரில், அவசர மாற்று ஏற்பாடாக 16 ஆம் திகதி(இன்று) தொடக்கம் கல்முனை மாநகர சபை எல் லைக்குட்பட்ட 06 வலயங் களிலும் 24 தள்ளு வண்டிகளைக் கொண்டு, சமையலறைக் கழிவுகளை – அதிலும் துர்நாற்றம் ஏற்படக்கூடிய கழிவுகளை மாத்திரம் சேகரித்து – அகற்றுவதற்கு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி உக்கும் கழிவுகளாயினும் உக்காத கழிவுகளாயினும்துர்நாற்றம்ஏற்படாதகுப்பைகள் அனைத்தையும் மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் வரை பொதுமக்கள் தமது வீடுகளிலேயே வைத்து, முகாமை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர் – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூதூரில் விசேட தேவையுடையோருக்கான பாடசாலையின் 6ஆம் ஆண்டு நிறைவு விழா

திருகோணமலை, மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட விசேட தேவை யுடைய மாணவர்கள் கல்வி பயிலும் டயமன் விசேட தேவை யுடையோர் பாடசாலையின் 6ஆவது ஆண்டு நிறைவு விழா, அப்பாடசாலையின் ஸ்தாபகரும் அதிபருமான மூதூர் பிரதேச சபை உறுப்பினர் அகீதா தலைமையில், நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ரீ.எம் ஜய்யூப் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, தனவந்தர்களின் ஒத்துழைப்புடன், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சீருடைகளை அன்பளிப்புச் செய்தார்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம். ஏ. அரூஸ், கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர் முக்தார், சட்டத்தரணி எம். ஹனான், ஓய்வுபெற்ற அதிபர் மரூப், விசேட தேவையுடையோர்கள் பாடசாலையின் ஆசிரியர்களான நகோஸ்வரன் தக்சிகா, தமிழ் செல்வன் வினித்திரா, பிராந்திய பிரமுகர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் மெட்வெடேவ், சிட்ஸிபாஸ் எதிர்பாராத தோல்வி!

இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டிகளில் ரபேல் நடால் வெற்றிபெற்றுள்ள அதே நேரம் ஸ்டெபினோஸ் சிட்ஸிபாஸ் எதிர்பாராத தோல்வியையடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால் பிரித்தானியாவின் டான் இவான்சை எதிர்கொண்டார். இந்தப்போட்டியில், 7-5, 6-3 என்ற நேர் செட்களில் ரபேல் நடால் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்குள் நுழைந்துள்ளார்.

மற்றொரு மூன்றாவது சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் ஜென்சன் புரூக்ஸ்பியும் கிரேக்கத்தின் ஸ்டெபினோஸ் சிட்ஸிபாசும் மோதியிருந்தனர். அந்தப்போட்டியில் முதல் செட்டை ஸ்டெபினோஸ் சிட்ஸிபாஸ் 6-1 என எளிதாகக் கைப்பற்றினார். ஆயினும், அடுத்து நடைபெற்ற செட்களில் விட்டுக் கொடுக்காது விளையாடிய ஜென்சன் புரூக்ஸ்பி, அடுத்த இரண்டு செட்களையும் 6-3, 6-2 என்ற கணக்கில்வென்றுநான்காவதுசுற்றுக்குமுன்னேறியுள்ளார்.

மற்றொரு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை நட்சத்திமான ரஷ்யாவின் டேனியல் மெட்வெடேவ், பிரான்சின் மோன்பில்சை எதிர் கொண்டார்.

இந்தப் போட்டியில் மோன்பில்ஸ் முதல் செட்டில் தோல்வியைத்தழுவினாலும் அடுத்த இரு செட்களிலும் மெட்வெடேவை 46, 6-3, 6-1என்ற கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சிஅளித்துநான்காவதுசுற்றுக்குமுன்னேறினார். இந்தப் போட்டி இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்தமை குறிப்பிடத்தக்கது. 35 வயதான உலக வரிசையில் 26 ஆவது இடத்திலிருக்கும் மோன்பில்ஸ், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகின் நம்பர் முதல் நிலை வீரரை வீழ்த்தியிருக்கிறார்.

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்த விவரம் வெளியானது

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்காக இலங்கைக் கிரிக்கெட் சபை வழங்கவிருக்கும் வருடாந்த ஒப்பந்தத் தொகைகள் குறித்த விவரம் தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றது.

இலங்கைக் கிரிக்கெட் சபை 7 பிரிவுகளில் இம்முறை வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தத்தினை மேற்கொள்ளவிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில் தேசிய கிரிக்கெட் அணியின் 20 வீரர்கள் இடம்பெறவிருக்கின்றனர். இந்தப் புதிய ஒப்பந்தத்தின்படி அதிக ஒப்பந்தத் தொகை கிடைக்கவிருக்கின்ற பிரிவு ஏ1 இல் வனிந்து ஹஸரங்க, துஷ்மந்தசமீர, திமுத்கருணாரட்ன மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த வீரர்களுக்கு 100,000 அமெரிக்க டொலர் வருடாந்த ஒப்பந்தத் தொகையாக வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு பிரிவு ஏ3இல் இல் உள்ளடக்கப்பட்டிருந்த இலங்கை டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரட்ன இம்முறை பிரிவு ஏ1 இல் உள்வாங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

80,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஒப்பந்தத் தொகை கிடைக்கும் பிரிவு ஏ2 இற்கான வருடாந்த ஒப்பந்தம் எந்த வீரர்களுக்கும்வழங்கப்படவில்லை என்பதோடு, 65,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பிரிவு பி1 இற்கான வருடாந்த ஒப் பந்தம் ஆறு வீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தப்பிரிவில் அஞ்சலோ மத்தியூஸ், பதும் நிஸங்க, லஹிரு திரிமன்ன, தசுன் ஷானக்க, தினேஷ் சந்திமால் மற்றும் குசல் ஜனித் பெரேரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

55,000 அமெரிக்க டொலர் ஒப்பந்தப் பிரிவான பி2 இல் இடம்பெறுகின்ற வீரர்களாக சரித் அசலங்க, ரமேஷ் மெண்டிஸ் மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர் உள்ளனர். 45,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பிரிவு சி1 இல் வேகப்பந்துவீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோ மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ இருவர் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

35,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பிரிவு சி2 விற்குரிய வருடாந்த ஒப்பந்தம் சமிக்க கருணாரட்ன, குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகியோருக்கு வழங்கப்படுகின்றது. மகீஷ் தீக்ஷனவுக்கு 30,000 அமெரிக்க டொலர்களும், பானுக்க ராஜபக்ஷ 25,000 அமெரிக்க டொலர்கள், பிரவீன் ஜயவிக்ரம 20,000 அமெரிக்க டொலர்களும் கொண்ட உள்நாட்டுப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து டெஸ்ட் அணியில் அறிமுகமாகும் இளம் வேகப்பந்துவீச்சாளர் சகிப் மொகமட்

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் இங்கிலாந்து பதினொருவர் குழாமில் 25 வயதான வலதுகை வேகப்பந்துவீச்சாளரான சகிப் மொகமட் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளரான மார்க்வூட் உபாதை காரணமாக இரண்டாவது டெஸ்ட்டில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அவருக்குப் பதிலாக சகிப் மொகமட் இணைக்கப்பட்டு அவர் தனது சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளார் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்சியாளர் போல் கொலிங்வூட் தகவல் வழங்கியுள்ளார்.

இங்கிலாந்தின் லங்காசயர் அணிக்காக முதல்தரப் போட்டிகளில் விளையாடிவரும் சகிப் மொகமட், இங்கிலாந்து தேசிய கிரிக்கெட் அணிக்காக 12 ரி-20 போட்டிகளில் விளையாடி 7 விக்கெட்டுகளையும், 7 ஒருநாள் போட்டிகளில் 14 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். பாகிஸ்தான் அணியுடன் கடந்த வருடம் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 9 விக்கெட்டுகளை 13.66 என்ற சராசரியில் வீழ்த்திய அவர், அந்தத் தொடரை இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்ததோடு தொடரின் நாயகன் விருதையும் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீராங்கனையாக ஸ்ரேயாஸ்

வீராங்கனையாக நியூசிலாந்தின் அமெலியா கெர்

சர்வதேசப் போட்டிகளிலும் கிடைக்கும் வாய்ப்புகளில் தனது திறமையை நிரூபித்து வரும் இந்திய துடுப்பாட்ட வீரரான ஸ்ரேயாஸ் அய்யர், பெப்ரவரி மாதத்திற்கான ஐ.சி.சியின் சிறந்த கிரிக்கெட் வீரராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இலங்கை அணிகளுக்கு எதிரான உள்நாட்டுத் தொடர்களில் ஸ்ரேயாஸ் அய்யரின் அபாரமான துடுப்பாட்டம் காரணமாக இந்த விருதைப் பெற்றிருக்கிறார். ஐக்கிய அரபு அமீரகத்தின் விருத்தியா அரவிந்த், நேபாளத்தின் திபேந்திர சிங் ஜாரி ஆகியோரை பின்னுக்குத் தள்ளி இந்தப் பெருமையை இவர் பெற்றுள்ளார்.

வலதுகை துடுப்பாட்ட வீரரான ஸ்ரேயாஸ் அய்யர், அகமதாபாத் மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 80 ஓட்டங்களை எடுத்தமை இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரிலும் அசத்திய அவர், 3 போட்டிகளில் 204 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். அதன் பின்னரான இலங்கையுடனான டெஸ்ட் தொடரிலும் அவரது ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தாலும் அது மார்ச் மாதத்துக்கான கணிப்புக்குள்ளேயே உள்ளடக்கப்படும் என்பது கவனிக்கத்தக்கது.

பெண்கள் பிரிவில் நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அமெலியா கெர், பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீராங்கனையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 21 வயதான கெர், இந்தியாவுக்கு எதிரான தொடரின்போது துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிலும் சிறப்பான ஆட்டத்தை பதிவு செய்தமையால் சிறந்த வீராங்கனையாக தேர்வாகியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

தோட்டத்தொழிலாளர்களின் 1,000 ரூபாவை வழங்காமலிருக்க முதலாளிமார் பல சதி நடவடிக்கைகளை கையாள்கின்றனர்

நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

தோட்டத்தொழிலாளர்களின் அடிப் படைச்சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத் துள்ளபோதும் அதனை வழங்காமல் தடுப்பதற்கு முதலாளிமார் பல்வேறு சதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதனால் தொழிலாளர்களுக்கு அநீதி ஏற்படும்போது அதுதொடர்பில் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே முறையிடுவதற்குத் தேவையான வசதி களை மேற்கொண்டுள்ளோம் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வேலைத்தளங்களில் தொழிலா ளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முறையிடும் முறைப்பாடு முகாமைத்துவ கட்டமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில் –

நாடுஎதிர்கொண்டுள்ளபொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டு மக்களும் பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு ஆளாகி இருக்கின்றனர்.

அதனால் அரச ஊழி யர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித் ததுடன் அதனை தனியார் ஊழியர் களுக்கும் வழங்கவேண்டும் எனவும் தெரிவித்திருந்தது.

இதுதொடர்பாக முதலாளிமார் சம்மே ளனத்துடன் கலந்துரையாடினோம். என் றாலும் ஒருசில தனியார் தொழிற்சாலை கள்தங்கள் ஊழியர்களுக்கு அரசாங்கம் தெரிவித்த நிவாரணத் தொகையைவிட அதிகம் வழங்கி வருவதாக இதன்போது அவர்கள் தெரிவித்தனர். அதனால் தனியார் துறையினருக்கு அந்தக் கொடுப்பனவுதற்போது கிடைப்பதில்லை.

குறிப்பாக தோட்டத்தொழிலா ளர்களின் அடிப்படைச்சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக நிர்ணயிக்க சம்பள சபை தீர்மானித்தது.

என்றாலும் முதலாளிமார் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ளமையால் தற்போது அந்த நடவடிக்கை நிறுத்தப் பட்டிருக்கின்றது.

அத்துடன் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதைத் தடுப்பதற்கு முதலாளி மார் பல்வேறு சதி நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றனர். குறிப்பாக நாள் ஒன்றுக்கு 20கிலோ தேயிலை கொழுந்து பறிக்கவேண்டும் எனவும் அதற்கு குறைவாகப் பறித்தால் அரை நாள் சம்பளம் வழங்குவதாகத் தெரி வித்து பல முறைப்பாடுகள் தெரிவிக் கப்படுகின்றன.

இவ்வாறான முறைப்பாடுகள் மிகவும் காலம் கடந்தே எமக்குக் கிடைக்கப் பெறுகின்றன. அதனால் தோட்டத் தொழி லாளர்கள் தங்களுக்கு ஏற்படும் அனைத்து வகையான பிரச்சினைக ளையும் அவர்களின் தொழிற்சங்கங்கள் ஊடாக அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்தே முறையிடுவதற்கு முடியுமான வசதிகளைத் தற்போது ஏற்படுத்தி இருக்கின்றோம்.

அதேபோன்று ஏனைய தொழிற் சாலைகளிலும் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அனைத்து வகையான முறைப்பாடுகளையும் தொழில் அமைச் சின் இணையத்தளத்துக்கு சென்று முறையிடும் பகுதியில், இருக்கும் இடத்தில் இருந்தே முறையிடலாம்.

அவ்வாறு முறைப்பாடு செய்யப்படும் போது அவர்களுக்கு அதுதொடர்பாக முறைப்பாடு இலக்கம் ஒன்று குறுந் தகவல் ஊடாக அனுப்பிவைக்கப்படும். அதன் ஊடாகத் தாங்கள் செய்த முறைப்பாட்டின் நிலை தொடர்பாக அவர்கள் அறிந்துகொள்ளலாம்.

எனவே தொழிலாளர்களின் நன்மை கருதி பல்வேறு சட்டத் திருத்தங்களை தற்போது நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். கடந்த வாரம் தொழிலா ளர்களுக்கான நட்டஈடு தொடர்பான சட்ட திருத்தம் நாடாளுமன்றத்தில் அனுமதிக் கப்பட்டது. – என்றார்.

காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கும் தீர்மானம் குறித்து மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் விசனம்

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திட மிருந்து 'காணவில்லை' என்ற சான்றிதழைப் பெற்றுக்கொண்ட காணாமல்போனோரின் குடும்பத்தினருக்கு ஒருதடவை மாத்திரம் ஒரு லட்சம் ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கும் நிலையில், அந்தத் தீர்மா னம் தொடர்பில் விசனம் வெளியிட்டிருக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், காணா மல் போனோரின் குடும்பங்கள் மரணச்சான்றி தழையோ அல்லது இழப்பீட்டையோ எதிர்பார்க்க வில்லை என்றும் மாறாக அவர்கள் உண்மை யையும் நீதியையுமே கோருகின்றார்கள் என் றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத் தால் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப் படையில் பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்டு 'காணக்கிடைக்கவில்லை' எனும் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ள காணாமல்போன நபரின் குடும்ப மீள்வாழ்விற்காக அவரது நெருங்கிய உறவினருக்கு ஒருமுறை மாத்திரம் ஒரு லட்சம் ரூபாவைச் செலுத்துவதற்கு நீதி யமைச்சரால் யோசனை முன்வைக்கப்பட்ட நிலையில், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேவேளை கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தின்போது, இதுவரை யில் காணாமல்போனோர் தொடர்பில் கிடைக்கப் பெற்றிருக்கும் 14 ஆயிரத்து 988 முறைப்பா டுகள் பற்றிய விசாரணைகளை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக 25 விசாரணைக் குழுக்களை நியமித்து, அந்தப் பணிகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வையின் 49 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் கடந்த 4 ஆம் மற்றும் 7 ஆம்திகதிகளில்நடைபெற்றதுடன், அதன்போது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகக் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் காணா மல்போனோர் விவகாரம் தொடர்பில் அரசாங் கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் தொடர்பில் மனித உரிமைகள் செயற்பாட்டா ளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அந்தவகையில் இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் னாள் ஆணையாளரும் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் தலைவருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் அவரது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்துள்ளார்.

'காணாமல்போனோரின் குடும்பத்தினருக்கு உண் மையும் நீதியுமே தேவையாக இருக்கின்றது. உண்மை, நீதி என்பவற்றுக்குப் பதிலாக மரணச்சான்றிதழும் இழப்பீடும் தமக்கு வேண்டாம் என்று அவர்கள் ஏற்கனவே தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் ஓர் உயிரின் பெறுமதி வெறுமனே ஒரு லட்சம் ரூபா மாத் திரமேயாகும். இது அவமரியாதை செய்யும் வகையிலான மிகமோசமான செயலாகும்' என்று அவர் அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி 'தீர்வுகாண்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தையோ அல் லது 'விசாரணைகளை விரிவுபடுத்துவதற்கான' செயற்பாடுகளையோ நோக்கி கைகாட்டுப வர்கள், இந்த அரசாங்கம் எந்தவொரு தரப்பினரையும்பொறுப்புக்கூறச்செய்வதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டிய நேரம் இதுவாகும். மாறாக அவர்கள் உண்மையையும் நீதியையும் முழுவதுமாகக் குழிதோண்டிப் புதைப்பதற்கே முயற்சிக்கின்றார்கள்' என்றும் அவர் மேலும் விசனம் வெளியிட்டுள்ளார்.

அதேவேளை இந்த விடயம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஷத்யாகிருவன்பத்திரன அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதி வில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் –

உள்ளகமற்றும்சர்வதேசரீதியில்அரசாங்கம் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிடுகின்றது. காணாமல்போனோர் தொடர்பில்விசாரணைகளைமுன்னெடுப்பதற்கு கடந்த வாரம் அமைச்சரவையில் தீர்மானிக் கப்பட்டது. அதுமாத்திரமன்றி காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதற்கான குழுக்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் ஸ்தாபிக்கப்பட்டி ருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில், உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டுக்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் அரசாங்கம் வாக்குறுதியளித்தது. காணாமல்போனோரின் பெரும்பாலான குடும்பங்கள் மரணச் சான்றிதழையோ அல்லது இழப்பீட்டையோ எதிர் பார்க்கவில்லை. மாறாக அவர்கள் தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையையே எதிர்பார்க்கின்றார்கள் என்று தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிகளுடன் இருவர் கைதாகினர்

கண்டி – அசலக்க, வெல்கஹவாடிய பிரதேசத்தில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பில் துப்பாக்கியுடன் இருவர் கைதுசெய் யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பட்டுமுல்ல மற்றும் அசலக்க பிரதேசங்களைச் சேர்ந்த 37, 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள மையுடன் இவர்களிடமிருந்து துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மஹியங்கனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளை அசலக்க பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது.

பட்டப்பகலில் வீடுபுகுந்து வவுனியாவில் கொள்ளை!

வவுனியாவில் பட்டப்பகலில் வீடு புகுந்து கொள்ளையர்கள் கொள்ளையிட்டுச் சென்றமையுடன், வீட்டில் நின்ற பெண் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் வசித்து வந்த குடும்பத்தினர் வேலைக்காக வெளியில் சென்றிருந்தமையுடன், ஒரு பிள்ளை பாடசாலைக்கும், மற்றையபிள்ளை உறவினர்வீட்டுக்கும்சென்றிருந்தனர்.

உறவினர் வீட்டிற்குச் சென்ற பெண் பகல் 11 மணியளவில் தனது வீட்டுக்கு வந்து அறை ஒன்றுக்குள் சென்ற, சிறிது நேரத்தில் வீடு புகுந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த அலுமாரி, சாமி அறை மற் றும் ஏனைய பகுதிகளில் சோதனை செய்தமையுடன், குறித்த பெண் அறையிலிருந்து வெளியில் வந்த போது அந்த பெண் மீது கதவு சட்டத்தால் தாக்கிவிட்டு அந்தப் பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் மோதிரம் என்பவற்றையும் அறுத்துச் சென்றுள்ளனர். இதன்போது 2 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்தப் பெண்ணை அயலவர்கள் மீட்டமை யுடன், அப்பெண்ணின் பெற்றோருக்கும் தெரியப்படுத்தினார்கள். இதுதொடர்பில்வவுனியாபொலிஸில்செய்யப்பட்டமுறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின் றனர். இதேவேளை, வவுனியா, உக்குளாங்குளம் மற்றும் பண்டாரிக்குளம் பகுதியில் கடந்த ஒரு மாதமாக பல்வேறு பகுதி களில் பட்டப்பகலில் வீடு புகுந்து கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.03.2022இல் வெளியிடப்பெற்றது.